This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# கரையெல்லாம் செண்பகப்பூ

www.writersujatha.com

## 1

'காடெல்லாம் பிச்சி
கரையெல்லாம் செண்பகப்பூ
நாடெல்லாம் மணக்குதில்ல
நல்ல மகன் போற பாதை'

– தமிழர் நாட்டுப்பாடல்கள்
(நா. வானமாமலை தொகுப்பிலிருந்து)

பாஸஞ்சர், திருநிலத்தில் போனால் போகிறது என்று நின்றது. ஒரு பெண் ஓடி ஓடி வெள்ளரிப் பிஞ்சு விற்றாள். முதல் வகுப்புப் பெட்டிலிருந்து ஒரே ஓர் இளைஞன் நீல நிற சூட்கேஸ், ஒரு கித்தாருடன் இறங்கினான். அவன் கழுத்தில் காமிரா மாலை அந்தப் பிரதேசத்தில் மிகவும் விநோதனாக, அன்னியனாக நின்றான். வெயில் கண்ணாடி அணிந்து சுற்றிலும் பார்த்தான்.

சின்ன ஸ்டேஷன், கச்சிதமான ஓர் அறை. அதனுள் சுவரில் பதிந்த, வாய்திறந்த, புராதன டெலிபோனில் ஸ்டேஷன் மாஸ்டர் பேசிக்கொண்டிருந்தார். பிளாட் பாரத்திலேயே கைகாட்டி இறக்கும் லீவர்கள் இருந்தன, தண்டவாளத் துண்டு, மணியாக சரக்கொன்றை மரத்தில் தொங்கியது. அதை இரு தடவை மஞ்சள் மலர்கள் உதிரத் தட்டிவிட்டு அந்த நீலச் சட்டைக்காரன், அன்னியனை ஒரு வஸ்துவைப்போல் பார்த்துக்கொண்டே சாவியுடன் என்ஜின் திசையில் நடந்தான். கருங்கல் கட்டடம் சற்றே தூரத்தில் மூன்றே மூன்று வீடுகள். ஸ்டேஷனிலிருந்து ஒரு மண் பாதை புறப்பட்டு எங்கேயோ மாயமாய்ச் சென்றது. ஓர் ஆலமரம்–ஏறக்குறைய 'ஸ்டேஷனே என்னுடையது' என்று அணைத்துக்கொண்டிருந்தது.

ரயில் 'ழே' என்று கூவிவிட்டு உபரி நீராவியைக் கக்கி விட்டுக் கிளம்பியது. அந்தப் பெண் ரயிலுடன் ஓடினாள். காசு கொடுக்காத அந்தப் பிரயாணி அவள் மார்பு குலுங்க ஓடிவருவதை ரசித்துக்கொண்டே சில்லறையை விட்டெறிந்தான். அவள் காசைப் பொறுக்கிக் கொண்டு, வீசி எறிந்தவனை நோக்கி, 'தத்' என்று துப்பினாள்.

கடமை முடிந்த அந்த நீலச் சட்டை அவனை நெருங்கி ஆராய்ந்தான். தூரத்தில் மறுபடி 'ழே'.

"இறங்கிட்டீங்களா?"

"மேம்பட்டிக்குப் போகணும்" என்றான் அவன். அவன் பெயர் எஸ்.வி. கல்யாணராமன். "எத்தனை தூரம்?" என்றான்.

"இருக்குங்க அஞ்சு மைல் தொலைவு. என்ன விசயம்?"